**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். MC 3/2022**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சரோஜினி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | க/பெ.ரமேஷ்குமார் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது :** | 27/2024 |

**20.03.2024**
**எதிர் மனுதாரர் ஆஜர்.**

சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் அசல் மனுவின் மனுதாரார் ஆவேன். எதிர் மனுதாரர் எனது கணவர் ஆவார். இரண்டாவது மனுதாரரான இளவர் மிருதுலானி எங்கள் இருவருக்கும் பிறந்த குழந்தையாவார். நான் எதிர் மனுதாரர் மீது எனக்காகவும் இளவருக்காகவும் வாழ்க்கை பொருளுதவி கோரி அசல் மனுவினை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு நிரூபண பிரமாண வாக்குமூலத்தினை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை மனுதாரர் தரப்பு சாட்சியத்தில் ஒரு பாகமாக ஏற்றுக் கொள்ள வேண்டுகிறேன். 27.04.2018 எனக்கும் எதிர் மனுதாரருக்கும் ஏற்பட்ட திருமண அழைப்பிதல் நகல் **ம.சா.ஆ.1** ஆகும். குழந்தை பிறப்புச்சான்று நகல் **ம.சா.ஆ.2** ஆகும். 1-ஆம் மனுதாரர் ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ.3** ஆகும். எதிர் மனுதாரர் ஆதார் கார்டு நகல் **ம.சா.ஆ. 4** ஆகும். 04.03.2020 பிரதிவாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு **ம.சா.ஆ.5** ஆகும். 16.03.2020 மனுதாரர் அளித்த பதில் அறிவிப்பு **ம.சா.ஆ.6** ஆகும். முதல் தகவல் அறிக்கை நகல் **ம.சா.ஆ.7** ஆகும். அறந்தாங்கி சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள HMOP 19/2020 வழக்கு நகல் **ம.சா.ஆ.8** ஆகும். புதுக்கோட்டை சமூக நலத்துறையில் குடும்ப வன்முறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கான விசாரணை அழைப்புகள் 06.11.2020 மற்றும் 17.12.2020 விசாரணைக்கு அழைக்கப்பட்ட அழைப்பு **ம.சா.ஆ.9 (2 எண்ணிக்கை)** ஆகும். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:**

எதிர் மனுதாரர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணையானது வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.